சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**MACOP.No. 19 / 2023**

ம.சா.1. மீனாட்சி 18.09.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் காந்தி நகரில் வசித்து வருகிறேன். எனக்கு இரண்டு மகன்கள். இந்த விபத்தில் இறந்துபோனது எனது பெரிய மகன் என்றால் சரிதான். அவருக்கு திருமணம் ஆகவில்லை. அவர் டெய்லராக வேலை பார்த்து வந்தார். எனது மகன் வீட்டிலேயே மிசின் வைத்து தையல் செய்து வந்தார். எனது மகனுக்கு மாதம் 20,000 வருமானம் வரும். எனது மகனுக்கு மாதம் 20,000 வரும் என்பதற்கு ஆவணம் எதையும்தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகனுக்கு 13 வருடங்களுக்கு முன்பு உடல்நிலை சரியில்லாமல்போய் வலது கால் முட்டிக்கு கீழ் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மகனுக்கு வலது கால் முட்டிக்கு கீழ் எடுத்துவிட்டதால் எனது மகன் டெய்லர் வேலை பார்க்க முடியாது என்றும் நான் பொய்யாக எனது மகன் டெய்லர் வேலை பார்த்து வருகிறார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. கரண்ட் மிசின் வைத்து தொழில் செய்து வந்தார். எனது மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் உள்ளதா என்றால் வாங்கி வைத்திருந்தார். அதை நாங்கள் பார்க்கவில்லை. எனது மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவது உரிமம் உள்ளது என்பதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த போது எனது மகன் இருசக்கர வாகனத்தில் சென்ற வாகனம் அவருக்கு சொந்தமான வாகனம் தான். அவர் ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து தென்புறம் திசையில் இருந்து வடபுற ரோட்டில் இருசக்கர வாகனத்தில் வந்தார் என்றால் சரிதான். ஆனால் அந்த அரசு பேருந்து சாலைவிதிகளுக்கு உட்பட்டு மேற்கில்இருந்து கிழக்கு நோக்கி வந்தார் என்றால் சரிதான். எனது மகன் சாலை விதிகளை பின்பற்றாமல் அவரது அஜாக்கிரதையால் ஓட்டி சென்று அவரது கவனக்குறைவான ஓட்டுதல் காரணமாக தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் அரசு பேருந்தின் ஓட்டுநரின் கவனக்குறைவாக இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனக்கு எந்தவித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.09.19 10:34:51 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்